**முதன்மை சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்**

**அசல் வழக்கு எண்.5/2023**

2026–ம் ஆண்டு **ஜீன் மாதம் 17–ம் தேதி** வாதி தரப்பு சாட்சி **வா.சா.1–ன்** வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திரு.எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரமேஷ்வரன் | வா.சா | 1 |
| த/க/பெயர் | லேட்.வேலாயுதம் | தொழில் | |
| கிராமம் | அனியாபுரம் | வட்டம் | மோகனூர் |
| வயது | 45 | நாள் | 17.06.2026 |

**முதல் விசாரணை:–**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். நான் இந்த வழக்கில் என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் தெரியும், அதிலுள்ள கையெழுத்து என்னுடையதாகும். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்று, அதில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை குறியீடு செய்தும், வழக்குரையில் கோரியுள்ளவாறு பரிகாரம் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1. 06.08.2020 தேதியிட்ட தாவா சொத்தை பொருத்து நானும், பிரதிவாதியும் ஏற்படுத்தி கொண்ட கிரைய ஒப்பந்த பத்திரம் அசல் **வா.த.சா.ஆ.1 ஆகவும்,**

2. 12.12.2022 தேதியிட்ட நான் வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.த.சா.ஆ.2 ஆகவும்,**

3. 14.12.2022 தேதியிட்ட என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் **வா.த.சா.ஆ.3 ஆகவும்,**

4. 21.12.2022 தேதியிட்ட என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பிரதிவாதி அனுப்பிய பதிலறிவிப்பு சார்வு நகல் **வா.த.சா.ஆ.4 ஆகவும்,** ஆகியவற்றை குறியீடு செய்தும், தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd/-M.Ramachandran

| |
|---|
| Taken down before / by me in the open court and read over / interpreted to the witness and acknolwedged by him / her to be correct. |
| Sd/.M.Ramachandran,<br>Principal Subordinate Judge, Tiruchengode. |